Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 703 /2023
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –1

| | | | |
|---|---|---|---|
| Name: | மணிகண்டன் | Calling: | புட் டெலிவரி வேலை |
| Father's Name: | ஹரி | Religion: | |
| Village: | விருகம்பாக்கம் | Age: | 29 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 11.02.2026 நேரம் : 02.35 PM

( எதிரி ஆஜர் .)

எ.ம.த.சா.1 புகார்தாரர் குறுக்கு விசாரணை.

சங்கர் என்ன தொழில் செய்கிறார் என்றால் தெரியாது, ஆனால் அவர் கடையின் முன்பு கேஸ் வெல்டிங் என எழுதியிருக்கும். அவர் கடை எங்கு உள்ளது என்றால் விருகம்பாக்கம், காந்தி நகர். வேறு ஏதேனும் தொழில் செய்கிறாரா என்றால் அதுக்குறித்து தெரியாது. சங்கர் என்பவர் எரிவாயு சம்மந்தமான தொழில் செய்கிறார் என்றால் சரிதான். அவர் சீட்டு நடத்தி வருகிறாரா என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது, ஆனால் பைனான்ஸ் செய்து வருகிறார். சங்கருக்கும் எதிரியான எனது தந்தைக்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனைப்பற்றி என் தந்தைக்கு தான் தெரியும் என்றால் சரியல்ல, எனக்கும் தெரியும் வட்டி காசு பல முறை நான் தான் கொடுத்துள்ளேன். அசல் ரூ.50,000 த்தையும் நான் தான் அவரிடம் கொடுத்தேன். சங்கரிடம் கொடுத்தாக சொல்லும் காசோலையை அவர் திருப்பி தராதது சம்மந்தமாக விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. உன்மையிலே நாங்கள் பணம் கொடுத்துவிட்டிருந்தால் காசோலையை கேட்டு காவல் நிலையத்தில் புகார்

கொடுத்திருப்போம் என்றாலும் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்பதால் தான் அதுக்குறித்து புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒரே ஏரியா என்பதால் தந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் கொடுக்கவில்லை. இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்தபிறகோ அல்லது வழக்கின் விவரங்கள் தெரிந்த பின்போ மேற்படி சங்கரிடம் சென்று கையளித்த காசோலையை கேட்டேனா என்றால் கேட்டோம், அவர் என்னிடம் தரமறுக்கீறார்கள், எனவே நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். அப்போதாவது காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. என் அப்பா கொடுத்த தகவலின் பேரில் தான் வழக்கிறஞர் இந்த வழக்கை நடத்துகிறார் என்றால் சரிதான். வழக்கறிஞருக்கு கொடுத்த தகவலின் பேரில் புகார்தாரரை குறுக்குவிசாரணை செய்யும் போது இந்த காசோலையானது சீட்டுக்காக கொடுக்கபட்டது என்று சொல்லியுள்ள நிலையில் நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை என் தந்தை பெற்றுக்கொண்டாரா என்றால் வீட்டிற்கே வரவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன சங்கதிகள் உள்ளது என்ற விவரம் தெரியும் என்பதால் தான் என் தந்தை அஞ்சல் துறையில் அறிவிப்புக்கொடுத்தும் அந்த அறிவிப்பை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் வீட்டிற்கு வரவில்லை. என் தந்தைக்கும் சங்கருக்கும் இடையே நடைபெற்ற பணப்பரிவர்த்தனை தொடர்பாக ஒரு இடத்தில் நான்கு ஆண்டுகள் என்றும் மற்றொரு இடத்தில் ஆறு ஆண்டுகள் என்று முன்னுக்குபின் முரணாக சொல்லியிருப்பதால் நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சங்கர் என்ற நபரை பற்றி சொன்ன சங்கதிகளை எல்லாம் சங்கரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எ.த.சா.ஆ 1 ஆவணத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் கிடையாது என்றாலும் அதை குறியீடு செய்ததே தவறு என்றாலும் சரியல்ல. என் அப்பாவை விசாரித்தாலும் உண்மை தெரியும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மணிகண்டன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.13 13:02:17 +0530

Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC. No. 703 /2023
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS -2

| | | | |
|---|---|---|---|
| Name: | ராஜா | Calling: | கார்பெண்டர் |
| Father's Name: | அறிவுடை நம்பி | Religion: | |
| Village: | விருகம்பாக்கம் | Age: | 35 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 11.02.2026 நேரம் : 03.10 PM

( எதிரி ஆஜர் .)

எ.ம.த.சா.2 புகார்தாரர் குறுக்கு விசாரணை.

சங்கர் என்பவர் எதிரியிடம் பணம் வாங்கி செல்வதை நான் எத்தனை முறை பார்த்திருக்கிறேன் என்றால் இரண்டு மூன்று முறை பார்த்துள்ளேன். கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 5 வருடத்திற்கு முன்பு. எவ்வளவு ரூபாய் பணம் வாங்கி செல்வார் என்றால் பணம் கேட்டு பிரச்சனை செய்யும் போது 10,000, 20,000 ரூபாய் என கொடுப்பார். பணம் சம்மந்தமான பிரச்சனை எப்போது முடிவுக்கு வந்தது என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. முழு தொகையையும் செலுத்தியபின்புதான் பிரச்சனை தீர்ந்திருக்கும் என்று சொன்னால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. பணம் பிரச்சனையை குறித்து எனக்கு நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு தான் தெரியும் என்றால் சரிதான், அதன் பிறகு எதுவும் இது தொடர்பாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காசோலையை சங்கர் வாங்கி சென்றதாக பொய்சாட்சியம் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் மகனே ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வாங்கி சென்றார் என்று சாட்சியம் அளித்துள்ள

நிலையில் நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு என பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராஜா

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.13 13:02:08 +0530